கற்பு

குமாரி ... கக
கிரிஜை ... ச0
மதயந்தி ... எ0
செல்லம்மாள் ... க0உ
விருபாட்சி ... கஉரு
சுகோதை ... கருரு
பொன்னம்மாள் ... கஅரு, உகச
காமாட்சி ... உகஎ
சுந்தை ... உசுரு
பெரியநாயகி ... உகூஉ, கூஉஉ

பிற கட்டுரைகள்

சௌராஷ்ட்ர நீதி சம்பு, ரு, கஅ, உரு, கூச, ருக, எஎ, கககூ, ககூஉ, ககூசு, கசஅ, கருச, கஎஎ, கஅச, உகூக, உசச, உசு0 உசுச
ருஞான சம்பந்தர் (ஆசிரியர்) ககூ
தானம் ,, உசு
ல்லகாலம் ,, எஅ
லெதெரியாமல் பேசாதே ,, கக0
ந்தசஷ்[illegible]ரதம் ,, கககூ
கா[illegible] ,, உசரு
[illegible] ,, உகூஅ
[illegible]ண்ட பேரடிகளார் (மு. பெருமாள்) சஎ
[illegible]மலை விழா ,, அக
இளைஞர் மன்றம் ,, ககஎ
விநாயகர் வழிபாடு ,, கசுச
கந்தவேளும் கலிவெண்பாவும் ,, உகஅ
தியாக மூர்த்தி ,, உருக, உஎகூ
கணவர் பெயர் கூறலாமா? ,, கூ0க
துணை (தி. மு. சங்கரலிங்கம்) ருஉ, உஎக
திருப்புகழ் புதுப்பாடல் ஒன்று (திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை) ககூங
உலக ஆசையில் ஓயாது உழலும் நெஞ்சே (திரு. K. S. சுந்தரமூர்த்தி) உகசு
ஆர்கொலோ சதுரர் (திரு. த. பி. சிவலிங்கன்) உசஅ

அன்பே சிவம் (M. S. தனம்) ௩௦௫
செவியுணவும், அவியுணவும் ,, ௩௩௩
நாகை வித்வான் சதாசிவம் பிள்ளை ௩௨௧
(S. இராமச்சந்திரப்பத்தர், B., A.
சப்-மாஜிஸ்ட்ரேட், தஞ்சை)
அறமொழிகள் (திரு. மு. பெருமாள்) ௧௯௫, ௧௯௬,
௨௦௪, ௨௧௦, ௨௧௫, ௨௨௪, ௨௪௭, ௨௫௦, ௨௭௦, ௨௭௨,
௨௮௦, ௨௮௮, ௨௯௭, ௩௦௦, ௩௦௮, ௩௧௬, ௩௩௨

அநுபவமுறை

கரிசலாங் கண்ணி ௨௮
புளியாரை ௨...
கீழா நெல்லி
துத்தி
துளசி
வில்வம்
நன்னாறி க...
தூதுளை க...

---

கீழ்க்காணும் அன்பர்களிடம் சந்தாத் தொகையைச்
செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

திரு. செ. பாலசுப்ரமணியபிள்ளை, 25 மேலக் கோபுரத் தெ...
மது...

,, ரா. ப. சாமிக்கண்ணு பிள்ளை 32, செட்டி ... த் தெ...

,, L. A. பரமன் செட்டியார், இந்தியன் பாங்...
பெரியகடைவீதி, ...

,, வீ. சங்கரன் பிள்ளை, 66 சொக்கலிங்க முடுக்கு,
திருநெல்வேலி டவு...

,, ஜெ. மு. சாமி, ஜவுளி வியாபாரம், நாகப்பட்டினம்.

,, வீ. திருஞான சம்பந்த முதலியார், மெய்கண்டார் கழகம்,
மண்டபத் தெரு, காஞ்சிபுர...

,, R. சண்முக முதலியார், காரியதரிசி:சண்முகனடியார் சங்க...
மெயின் பஜார், வேலூர் N.A. D...

,, ஜெ. மு. சாமி, 145 கீழ மாசிவீதி, மதுரை.

,, K. V. நடராஜ முதலியார், ஜவுளி வியாபாரம், ஈரோடு.

,, அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார், 232 ராஜவீதி,
கோவை.

,, K. S. ராமசாமி பிள்ளை, ஆசிரியர் போர்டு ஸ்கூல்,
கைக்கோளபாளையம், விஜயமங்கலம் (கோவை ஜில்லா

உ

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

| | | |
|---|---|---|
| மலர் 18 | விஜய ஆண்டு சித்திரைத் திங்கள் ஏப்ரல்-1953 | இதழ் 1 |

## திருப்புகழ்

### பொது

பொன்னை விரும்பிய பொதுமாதர்-
புன்மை ரும்பியெ தடுமாறும்;
என்னை விரும்பிநி ஒருகால்நின்-
எண்ணி விரும்பவு மருள்வாயே;
மின்னை வி ம்பிய சடையாளர்-
தாரம் விரும்பிய குருநாதா;
அ ந்தரங்க பக்தி ய குறமாதை-
பருந்துறவு பூ ரும்பிய பெருமாளே.
ள்ளி

### பதவுரை

மின்னை விரும்பிய சடையாளர் – மின்னலை விரும்புகின்ற சடை முடியையுடைய தலைவராகிய சிவபெருமான், மெய்யின் விரும்பிய குருநாதா-உண்மையாக விரும்பிய குருமூர்த்தியே! அன்னை விரும்பிய-உலகமாதாவாகிய உமாதேவியார் விரும்புகின்ற, குறமாதை அண்மி விரும்பிய பெருமாளே - வள்ளியம்மையாரை நெருங்கி விரும்புகின்ற பெருமையின் மிக்கவரே! பொன்னை விரும்பிய–பணத்தையே விரும்புகின்ற, பொதுமாதர்–பொதுமகளிரது, புன்மை விரும்பியெதடுமாறும்–தாழ்மையான உறவை விரும்பி நின்று [பலகாலும்] தடுமாற்றத்தையடைந்த, என்னை விரும்பி - அடியேனை விரும்பி, ஒருகால்–ஒருமுறையாவது, நின் எண்ணி விரும்பவும் நீ அருள்வாயே-உம்மையே நினைத்து அன்பு செய்யும்படி தேவரீர் அருள்புரிவீர்.

## பொழிப்புரை

மின்னை விரும்புகின்ற (சிவந்த) சடாபாரத்தையுடைய சிவபெருமான் உண்மையில் விரும்புகின்ற குருமூர்த்தியே! உலக மாதாவாகிய உமையம்மையார் விரும்புகின்ற வள்ளியம்மையை யடைந்து விரும்புகின்ற பெருமிதமுடையவரே! பொன்னையே விரும்புகின்ற பொதுமகளிரது இழிந்த உறவை விரும்பி உழலுகின்ற அடியேனை விரும்பி, ஒருமுறையாவது உம்மையே நினைத்துக் காதலிக்கத் தேவரீர் அருள் புரிவீர்.

## விரிவுரை

**பொன்னை விரும்பிய பொதுமாதர்:—**

பொதுமாதர்—பரத்தையர்.

பொது மகளிருக்கு பொருட் பெண்டிர் என்றும் ஒரு பேருண்டு. பொன்னையே பெரிதும் விரும்புவார்கள். அவர்கள் எத்தனைக்கு எத்தனை அதிகம் பொன் தருவார்களோ அத்தனைக்கு அத்தனை நேயஞ்செய்வார்கள். பொன் தர முடியாதபோது அவர்கள் வெறுப்பார்கள். விளக்கு ஒளியும் வேசியர் நட்பும் இரண்டும் ஒன்று; அகலிலே உள்ள நெய்யைத் திரி கொண்டுபோய் எரிகின்ற விளக்கொளிக்குத் தருகின்றது. அதுபோல் வீட்டிலேயுள்ள பொன்னை ஒருவன் கொண்டுபோய் விலைமகளிருக்குத் தருகின்றான். நெய்யற்றவுடன் விளக்கொளி நின்றுவிடும். கையற்றவுடன் வேசி நட்பும் நின்றுவிடும்.

விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே அறுமே அவரன்புங்
கையற்ற கண்ணே அறும். —நாலடியார்.

இராமர் மான் பின்னே போனபோது, அம் மான் நெடுந்தூரம் அவரை அலக்கழித்தது. அந்த மானின் தன்மையைக் கூறவந்த கம்பநாடர் "பொதுமகளிர் மனம் போலே! அம் மான் மறைந்தது" என்கின்றார்.

* * * "நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனமெனச் சென்ற தம்மான்"

**புன்மை விரும்பிய அடியேன்:—**

பொதுமகளிரது உறவு நன்மையானதன்று; புன்மையானது. செல்வத்தை மட்டும் அழிக்காது; புகழையும் உடல் நலத்தையும் முத்தி நலத்தையும் அழிக்கும். "கதியை விலக்கு மாதர்கள்" என்கின்றார் மற்றொரு திருப்புகழில். "மைவிழியார் மனையகல்" என்ற ஆத்திச்சூடியின் வாக்கும் கருதத்தக்கது. மிகவும் கொடுமை வாய்ந்த அம்மாதர் மயக்கத்தில் ஆழ்ந்தார் நரகில் வீழ்ந்தாரே யாவார்.

"கண்டுமொழி பேசிமனங் கண்டுகொண்டு கைவிலையாக்
கொண்டுவிடு மானார்பொய்க் கூத்தொழிவ தெந்நாளோ"
—தாயுமானார்.

என்னை விரும்பி:—

"ஐயனே! உன்னை விரும்பாது பொன்னை விரும்பிய பொது மகளிரை விரும்பித் தடுமாறும் அடியேனை நீ விரும்பியாட் கொள்ளவேண்டும். நான் உன்னை விரும்பவில்லையானாலும் நீ என்னை விரும்பவேண்டும். தாயை சேய் விரும்பவில்லை யானாலும், சேயைத் தாய் விரும்புவாளன்றோ? சேயாகிய அடியேனைத் தாயாகிய நீ வெறுக்காது விரும்பியருள் செய்தல் வேண்டும்"

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலை வியனாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். —நம்பியாண்டார் நம்பி.

ஒருகால் நின் எண்ணி விரும்பவும் அருள்வாயே:—

"ஒருமுறையாவது உன்னையே நினைத்து விரும்பி உய்ய அருள்புரிவாய்"

"ஒருகால் முருகா பரமாகுமரா உயிர்கா எனவோ தருள்தாராய்"
—திருப்புகழ்.

மாதராசையாகிய நோய்க்கு மருந்து ஞானபண்டித னுடைய நினைவு. நெருப்பின் அருகில் சென்றார்க்கு பனிவாடை யணுகாதது போல் முருகனை இடையறாது நினைப்பார்க்கு மாத ராசை யணுகாது.

"மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்" —திருஅருட்பா.

"அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றபடி "உன்னை அடியேன் எண்ணவேண்டி நீ என்னை எண்ணு" என்கின்றார். இறைவனை இடையறாது எண்ணுதலே இன்ப நிட்டையாகும். பட்டினத்தடிகளும் காரைக்காலம்மையாரும் இறைவன்பால் மறவாமை வேண்டும் என்றே வரமிரந்தார்கள். இறைவனை மறவாமையால் பிறவாமையைப் பெறலாம்.

"எத்தான் மறவாதே நினைக்கின்றேன்" —சுந்தரர்.

"இரவும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்"—அப்பர்.

"உன்னை மறந்திடுவேனோ?" —இராமலிங்கர்.

மின்னை விரும்பிய சடையாளர்:—

சிவபெருமானுடைய சடாபாரம் மின் வண்ணமாக விளங் கும். மின்னலைப் போன்ற நெளிவும் ஒளியும் உடையது. இறைவனுடைய அளப்பரிய பெருமைகளுள் ஒன்று சடை

யாகும். சடைமகுடமே மணிமகுடத்தை நிலைநிறுத்தும். அதனாலேயே சடைமகுடமுடைய வசிட்டர் இராமருக்கு மணிமகுடஞ் சூட்டினார் என்று வரலாறு பேசுகின்றது. அகில வுலகங்களையும் சடைமுடியுடன் ஆளுகின்றவர் ஆதலின் "சடையாளர்" என்று கூறுகின்றார். இனி சடைமுடி தனக்கென ஒன்று வேண்டாத தன்மையைத் தெரிவிக்கின்றது.

மெய்யின் விரும்பிய குருநாதா:—

உண்மைப் பொருளை உபதேசிக்குமாறு சிவபிரான் விரும்பிய குருநாதர். இதனால் சிவபெருமான் தந்தையாராக இருக்க மைந்தனாகிய கந்தனிடத்திலே நின்று உபதேசம் பெறுவது முறையோ? அது சிவபெருமானுடைய முழுமுதற் றன்மைக்கு இழுக்கன்றோ? என்றெல்லாம் பேசி இடர்ப்படுவாரும் உளர்.

சிவன் வேறு குகன் வேறு அன்று; "ஈசனே அவன்" என்பது கந்தபுராணம். தனக்குத் தானே மகனாகித் தனக்குத் தானே உபதேசித்துக்கொண்டார் என உணர்க. முருகவேளை சிவனென்றே அறியாமையால் சூரபன்மன் தனது குலமும் திருவும் இழந்தான் என்ற கந்தபுராணக் கருத்தைக் கருத்தில் இருத்துக. ஐம்முகச் சிவனும் அறுமுகச் சிவனும் ஒன்றே யென வுணர்க. சிவனுடைய தொல்லைவடிவு ஆறுமுக வடிவு என்பதை "தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான்" "ஆடலால் மதலையாயினன் காண்" "மணியிடைக் கதிர் வரு திறம்போல்" என வரும் திருவாக்குகளால் இதனைத் தெளிக. முருகவேளைச் சிவம் என்றே எண்ணாமையால் சூரபன்மன் கேடுற்றான் என்பதை யறிந்தும் அவ்வண்ணம் உன்னியும் உரைத்தும் இடர்ப்படுகின்றார் பலர்.

காலமாய்க் காலமின்றி கருமமாய்க் கருமமின்றி
கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி யநாதியாய் நங்கட்கெல்லாம்
மூலமாயிருந்த வள்ளல் மூவிருமுகங்கொண் டுற்றான்.

— கந்தபுராணம்.

அன்னை விரும்பிய குருமாதை:—

அன்னை—உமையம்மையார்.

எல்லா வுலகங்கட்கும் உயிர்கட்கும் அவளே அன்னை. ஏனைய அன்னைகள் உடம்புக்கு வந்தவர்கள். இன்று நம்மைப் பெற்ற அன்னை, பின்னர் மாய்ந்து தான் ஒரு அன்னையை நாடிச் செல்லுவாள். ஆகவே அகில உலக அன்னை அம்பிகையே யாகும்.

அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே! பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே"

—தாயுமானார்.

வள்ளியம்மையார் ஞானவல்லியாகும். "சுந்தரஞான மென் குறமாது", "ஞான குறமாது" என்றமையாலறிக. உமையம்மையார் ஞானமேயாகும். ஆகவே ஞானப்பூங்கோதையாகிய உமாதேவி ஞான குறமாதை விரும்புகின்றனர். ஞானத்தை ஞானம் விரும்புமன்றோ?

குறமாதை அண்மி விரும்பிய பெருமாளே:—

அண்முதல்—பொருந்துதல்

வள்ளி—ஞானம். முருகன்—ஆனந்தம். ஞானத்தை ஆனந்தம் விரும்பும். ஞானத்தின் பயன் இன்பம். முருகன் வள்ளியை விரும்புகின்றான் என்ற செய்தியைக் கூறும் இடங்களில் எல்லாம் இக்கருத்தையே உன்னுக. காமனை எரித்த கண்ணிலிருந்து ஞானச் சுடராய் வந்த எம்பிரான் ஒரு பெண்ணை விரும்பமாட்டான் என்பது யாவருக்கும் விளங்கக் கூடியதுதானே?

## கருத்துரை

சிவ குருநாதரே! வள்ளிமணாளரே! உம்மையே விரும்பி உய்யுமாறு என்னை விரும்பி அருள்புரிவீர்.

---

## ஸௌராஷ்ட்ர நீதி சம்பு

68. எச்சமயம், எவ்வார்த்தை வேண்டுமோ, அச்சமயத்தில் அவ்வார்த்தையை (மறதியின்றி) ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, பிறர் மனம் நோகாமலும் தன் மனம் நோகாமலும்; எவன் சதா காலத்திலும் பேசுகின்றானோ அவனே புத்திமான்.

69. யாகசாலை, சிறுகுழந்தை, கர்ப்பஸ்த்ரீ, கோவில், குரு, கடவுள், இளவரசன், கிழவன் இவர்களில் யாரையேனும் பார்க்கப்போவதாக இருந்தால் கையில் வெகுமதியுடன் போகவும்.

70. நாவினால் மென்மேலும் ஐஸ்வரியம் கிடைக்கலாம். நாவினால் பந்து மித்திரர்கள் சேரலாம். நாவினால் விலங்கும் கிடைக்கலாம். நாவினால் பிராணனைக்கூட விட்டுவிட நேரிடலாம்.

71. இளநீரில் இனிய நீர் நிரம்புவது போன்று பாக்கியம் வருகையில் தொடர்ந்து வந்து நிரம்பும். போகையில் எப்படி போகும்? கேள்! யானையால் விழுங்கப்பட்டு, பின்பு கழியப்பட்ட விளாம் பழத்தின் உள் சத்து எப்படி போயிருக்குமோ அப்படிப் போய்விடும் பாக்கியம்.

6

உ

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

## சிறுத்தொண்ட நாயனூர் புராணம்

காவிரிநதியால் கவின் பெறுகின்ற நாடு சோழ வளநாடு; அத் திருநாட்டில் மன்மதனை விழியால் எரித்த விமலனூர் எழுந்தருளியுள்ள அரிய தலம் திருச்செங்காட்டங்குடியாகும். அப்பதியிலே மாமாத்திரர் மரபிலே பரஞ்சோதியார் என்பார் சிறப்புற்று இருந்தனர்.

பரஞ்சோதியார் மருத்துவ நூல்களையும், எல்லையில்லாத வடமொழி நூல்களையும், போருக்குரிய வில் வாள் முதலிய படைப் பயிற்சிகளையும் கற்று வல்லவராக விளங்கினூர். யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவைகளையும் பிற கலைகளையும் அறிந்து தனக்கு ஒப்பார் எவருமின்றி வீரராக நின்றூர். இவ்வாறு கலைகள் அனைத்தையுங் கற்று, அவைகளின் பயன் கண்ணுதற் பெருமான் கழலிணையைக் கருதுவதேயாகும் என்று தெளிந்து, காலனையுதைத்த கருணைத் திருவடியை இடையறுது சிந்தித்து, பள்ளத்தில் பாயும் தண்ணீர்போல் அன்புசெய்து வந்தார்.

*உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றூல்*
*தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே*
*கொள்ளுமுணர்வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு*
*பள்ளமடையாய் என்றும் பயின்றுவரும் பண்புடையார்.*

சிவபெருமானுடைய அடியார்கட்கு எந்நாளும் இனிய தொண்டுகள் புரிவார், சோழநாட்டை யாண்ட மன்னவனிடம் நெருங்கிய தொடர்புடைய சேனைவீரராக நின்றூர். பலமுறை யானைமீது சென்று பகைவர்களுடைய போரில் வென்று, பல நாடுகளை மன்னன்வசம் ஆக்கினூர். அதனுல் இவருக்கு அரசாங்கத்தில் அளவிறந்த பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது. வாள்வலியுந் தோள்வலியும் மிக்குடையராக அவர் பெருமைபெற்றூர்.

வடநாட்டிலேயுள்ள வாதாபி என்ற நகரத்து மன்னன் சோழநாட்டையாளும் பல்லவ மன்னனை முன்னே வென்று வீறு பெற்றிருந்தனன். அதனுல் பரஞ்சோதியார் நால்வகைச் சேனைகளுடன் சென்று, வாதாபி நகரத்தையாளும் மன்னவனுடன் கடும்போர் செய்து அவனை வென்றனர். அங்குள்ள விலையுயர்ந்த நவமணிகளையும் பொற்குவியலையும் யானைகளையும் குதிரைகளையும் இன்னும் பல உயர்ந்த பொருள்களையும் கவர்ந்து கொண்டு தனது மன்னவனிடம் வந்து சேர்ந்து அவைகளைத் தந்து வணங்கினூர்.

அம்மன்னன் அதுகண்டு அதிசயித்தான். அவருடைய வீரச் செயலை நினைந்து விம்மிதங் கொண்டான். "என்னுலும் வெல்லமுடியாத வடதேயத்து வாதாபி மன்னனை எவ்வாறு வென்றீர்?" என்று வியப்புடன் வினவினன். அருகில் இருந்த அமைச்சர்கள் அரசனைப் பணிந்து, "அரசர் ஏறே! இவர் சிவ பெருமானுடைய திருவருள் பெற்றவர். அருள் வலிமையுடையவர். திருத்தொண்டின் திறம் படைத்தவர். அதனல் இவருக்கு நிகரானவர்கள் இவ்வுலகில் எங்கும் இல்லை" என்று இயம்பினர்கள். சிவபெருமானுடைய திருத்தொண்டர் என்று கேட்டறிந்த மன்னவன், "ஆ! நான் கெட்டேன். இவர் ஈசனடியார் என்பதை யுணராது ஒழிந்தேன். என்னே என் மதி? கொடிய போர்க்களங்களுக்கு இவரை யனுப்பி ஏவல் கொண்டேன். இது பெரும் பிழையாகும்" என்று அஞ்சினன். "பெருமானே! சிறியேனுடைய பெரும் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று வணங்கினன். மன்னன் வணங்கியதைக் கண்ட பரஞ்சோதியார் தாமும் மன்னனை வணங்கி, "வாள்வேந்தே! வருந்தற்க. என்னுடைய உரிமைத் தொழிலுக்கு ஏற்ற கடமையையே நான் செய்தேன். அதனல் என்ன குற்றம்? நீர் இதுபற்றி இரங்குதல் வேண்டாம்" என்ருர். மன்னன் மீட்டும் அவரைப் பணிந்து, "சிவனடியாராகிய தேவரீர் என்னிடம் பணி செய்தல் கூடாது. தாங்கள் பெரிய சிவபக்தர். ஆகவே தாங்கள் தங்கள் ஊர் சென்று உமது விருப்பம்போல் திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிரும்" என்று கூறி, நிறைந்த நிதிக்குவியல்களும் நில புலங்களும் தந்து, அன்புடன் தொழுது விடை கொடுத்து அனுப்பினன்.

வேந்தனிடம் விடைபெற்ற பரஞ்சோதியார் தமது திருநகரமாகிய திருச்செங்காட்டங் குடியை யடைந்து, அங்கு கணபதிச்சுரம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவரை இறைஞ்சினர். முன்போல் திருத்தொண்டில் ஒரு சிறிதும் வழுவாமல் செய்கின்ருர். தாம் செய்யும் திருத்தொண்டுக்கு அனுகூலமாகக் குற்றமில்லாத குடியில் பிறந்த திருவெண்காட்டு நங்கை யென்பாரைத் திருமணஞ் செய்துகொண்டார். இருவருங் கருத்தொருமித்து மனையறம் புரிந்து வையம்புகழ வாழ்ந்தார்கள்.

அடியார்களுக்கு, அமுதினும் இனிய அன்னம், அறுசுவைகள் நிறைந்த கறிகள், நெய், பால், தயிர், பண்ணியம், பாயசம் முதலிய உயர்ந்த உணவுகளைப் படைத்துத் தண்ணீரும் தந்து உபசரிப்பார். அதனுல் அவருடைய திருமாளிகையிலே எண்ணில்லாத திருத்தொண்டர்கள் விருப்புடன் வந்து அமுதுண்டு மகிழ்வாராயினர்கள்.

குளிர்ந்த சந்திரனையும் வெப்பமாகிய பாம்பையும் ஒற்றுமைப்படுத்தி ஒருங்கே சடையில் சூடிய சிவபெருமானுடைய

திருத்தொண்டர்களை வழிபடும் அன்பின் மிகுதியால் அடியவர்களின் திருமுன்பு பரஞ்சோதியார் மிகவும் அடக்கமாக உடம்பை வணக்கிச் செல்லுவார். அதனால் இவரைச் சிறுதொண்டர் என்று உலகம் உரைப்பதாயிற்று.

> சேதமதி யரவினுடன் செஞ்சடைமேல் செறிவித்த
> நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
> மேதகையார் அவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்
> ஆதலினால் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல்.

நாள்தோறும் கணபதிச்சுரத்தின்கண் அமர்ந்த கண்ணுதற்கடவுளை வணங்கியும், அளவில்லாத அடியார்கட்கு அமுது செய்வித்தும் அகமகிழ்ச்சியுடன் வாழ்ந்துவந்தார்.

சிவபெருமானுடைய திருவருளினால் நிறைந்த தவமுடைய சிறுத்தொண்டருடைய மனைவியாரும் இல்லறத்தின் ஆணிவேருமாகிய திருவெண்காட்டு நங்கையார் கருக்கொண்டனர். வலம்புரி சங்கில் ஆணிமுத்து கருவடைந்ததுபோன்ற அக்கரு முதிர்ந்து நாளும் கோளும் நன்னிலை பெற்ற ஒரு நன்னாளில் சீராளதேவர் என்ற திருமைந்தர் அவதரித்தார். சிறுத்தொண்டர் பெருமகிழ்ச்சியுற்று, திருமாளிகையை நன்கு அலங்கரித்தனர். உறவினர் உள்ளம் உவந்தார்கள். பிள்ளை பிறந்ததை முன்னிட்டுப் பெருவிழாக்கொண்டாடினர். மங்கலவாத்தியங்கள் முழங்கின; மறை முழங்கியது; மாதேவன் அடியவர்கட்கு ஆடையும் அரதனமும் நிரம்ப அளிக்கப்பட்டன. தங்கள் திருமரபுக்கு ஏற்றபடி பத்துநாள்களிலும் சடங்குகளைச் சிறப்பாகச் செய்து காப்பு அணிவித்தார். அன்பு நிறைந்த பெருஞ்சுற்றத்தார்கட்கும் ஆடைகளும் அணிகலன்களும் அளித்தார். சீராளதேவர் தாய்களிக்கத் தந்தை களிக்கத் தமர்களிக்க வளர்ந்து, திருவடியில் பொன்மணிக் கிண்கிணி யொலிக்கத் தளர்நடையிட்டனர். சுருண்டு இருண்ட தலைமயிரைப் பின்னிச் சுட்டியணிந்தும், திருக்காதுகளில் குதம்பையும் காதணியும் விளங்கவும், திருக்கழுத்தில் மணிமாலைகளும், மார்பினில் ஐம்படையணியும், திருக்கரங்களில் பொன்னாபரணங்களும், இடையில் மணிச் சதங்கைகளும் அழகு செய்யத் திருவிளையாடல் புரிந்தார். மூன்றாவது ஆண்டில் முடியெடுத்து மங்கலச் சடங்குகள் புரிந்தார்கள். ஐந்தாவது ஆண்டில், மிகமிகச் சிறப்பாகப் பள்ளியில் வைத்தார்கள்.

அந்நாளில் புகலியில் வந்து அவதரித்த திருஞானசம்பந்தர் தமது தொண்டர் குழாத்துடன் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினர். சிறுத்தொண்டர் அவரது வரவையறிந்து, வழிமுழுதும் வாழை கமுகுகள் நாட்டி, மாலைகள் தொங்கவிட்டு, நிறைகுடமும் வாசமணிவிளக்கும் வைத்து, எதிர்கொண்டு, பிள்ளையாருடைய திருவடிகள் மீது வீழ்ந்து வணங்கி ஆராத

காதலுடன் அழைத்து வந்தார். தமது திருமாளிகையில் இருத்தி அவருடைய திருவடி பூஜை செய்து ஞான போனகருக்கும் உடன் வந்த அடியார்கட்கும் திரு அமுது அளித்தார். திருஞானசம்பந்தர் கணபதீச்சுரக் கடவுளைப் பாடும் பதிகத்தில் சிறுத்தொண்டருடைய திருத்தொண்டினைச் சிறப்பித்துப் பாடியருளினர்.

> பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூர
> சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிரா நோய்தந்தானே
> செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ப
> வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே.

திருஞானசம்பந்தர் சிலநாள் சிறுத்தொண்ட நாயனருடைய திருமாளிகையில் தங்கியிருந்து அவரிடம் விடைபெற்றுச் சென்றருளினர்.

இவ்வாறு சிறுத்தொண்ட நாயனர் ஒப்பற்ற அன்புடன் நாளும் அடியவர்கள் திருக்கூட்டத்திற்கு இனிய அமுது ஊட்டி அரிய திருத்தொண்டு புரிந்துவர, இவருடைய பற்றற்ற தொண்டின பெருமையை உலகத்திற்கு உணர்த்தி உய்விக்க திருக்கயிலாயபதி திருவுளங் கொண்டருளினர். அவ்வாறு திருவுளங் கொண்ட தேவதேவர் வைரவசந்யாச வடிவங் கொண்டருளினர்.

சிவந்த சடாமகுடமானது, கரிய முகிலினம் மொய்த்து எழுந்ததுபோல் சுருண்ட கரிய மயிர் முடி கவின் செய்தது; அம் முடியில் உடுக்குலங்களைப் பதியவைத்தாற்போன்று தும்பை மலர்கள் துலங்கின; திருநீற்றுப் புண்டரத்திற்கு இடையே பிறைமதியை சிறியதாக்கி வைத்தது போன்ற பொட்டு பொலிவு செய்தது. திருச் செவிகளில் இரத்தின மணியுடன் கூடிய சங்க வெண் குழையும், அதில் செருகிய செவ்வரத்தம் பூவும் இரு பக்கங்களிலும் எழில்புரிந்தன; திருக்கழுத்திலேயுள்ள நீல கண்டத்தை மறைக்கும்படி, அமுதக்குமிழி போன்ற பளிங்கு மணிவடங்கள் கட்டப்பெற்று, அதைக் கண்டார் உயிரையும் உடம்பையும் உருகவைத்து ஒளி செய்தன; செய்ய மேனியில் கஞ்சுகமும், சங்கு மாலையால் ஆகிய சன்ன வீரமும், தோள் வளையங்களும் கடிசூத்திரமும், திருவடியில் பொற்கலனும் அழகு செய்தன. 'உலகினரே! அடியவர்கட்கு அரனர் புரியும் திருவருளின் எளிமையை உணர்ந்து உய்மின்கள்; அவன்பின் வழியில் நிற்பீர்களாக" என்று அறைவன போன்று திருவடிகளில் மணிச்சிலம்புகள் இனிது ஒலித்தன. அயன் கபாலந் தரித்த இடத்திருக்கரத்தில் தாங்கித் திருமார்பில் அணைத்த திரிசூலமும், வலத்திருக் கையில் தமருகமும் விளங்கின. திருவடித் தாமரை நிலஞ்செய் தவத்தால் நிலத்தில் ஆடவும், அழகு பொழியும் திருமுகத்தில் புன்முறுவலின் ஒளி வீசவும், மும் மலத்தின் வலியைக் கெடுக்கும் முச்சூலத்தின் வெயில் பரவவும்,

இறைவர் இத்தகைய திருக்கோலங் கொண்டு திருச்செங்காட்டங் குடியை யடைந்தருளினர்.

நாடோறும் ஆயிரக்கணக்கான அடியார்கள் அன்ன முண்ணும் மனையில் அன்று ஒருவரும் வந்தாரில்லை. அடியார்கட்கு அமுது செய்விக்கும் குறிக்கோளுடைய நாயனர் அது பற்றிப் பெரிதும் வருந்தினர். தனது விரதத்திற்கு இடையூறு வரக்கூடாதே என்று அஞ்சினர். அதனல் அடியாரைத் தேடிக்கொண்டு வெளியே போயிருந்தார்.

வைரவராகவந்த சிவபெருமான் மிகுந்த பசியுடையவர் போல், எதிரிலே கண்டவர்களை, "சிறுத்தொண்டர் திருமனை யெங்கே?" என்று வினவிக்கொண்டு, அவருடைய திருமாளிகைக்கு முன்னே வந்து நின்றார். "சிறுத்தொண்டர் உள்ளே இருக்கின்றாரோ?" என்று அழைத்தருளினர். மனைக்குள் இருந்த "சந்தன நங்கை" என்ற வேலைக்காரம்மை முன்வந்து, வைரவர் திருவடியைத் தொழுது, "பெருமானே! முடிவிலாத அடியார்களைத் தேடிக்கொண்டு நாயனர் வெளியே போயிருக்கின்றார். எம்மையாளவந்த எந்தையே! உள்ளேவந்து இருங்கள்" என்று கூப்பிட்டார்.

வைரவர் அம் மாதின் முகம் நோக்கி, "அம்மா! பெண்கள் தனித்திருக்கின்ற இடத்தில் நாம் வரமாட்டோம்" என்றார். இச் சொல்லை உள்ளிருந்து கேட்ட வெண்காட்டுநங்கையார், வந்த அடியார் சென்று விடுவார்போல் காணப்படுகின்றது என்று கருதி அஞ்சி, மனைவாழ்வின் கடமை பூண்ட அவர் வாயிலின் முன்வந்து தொழுது கூறுவார். "அடிகளே! சிவபிரான் அடியார்கள் அமுதுசெய்ய இன்று ஒருவரும் வராமையால் அவர் அடியாரைத் தேடிக்கொண்டு வெளியேபோயிருக்கின்றார். தேவரீர் எழுந்தருளியிருக்கின்ற திருவேடத்தைக் கண்டால் தமதுபெரும்பேறு என்று கருதி மிக்கமகிழ்ச்சியடைவார். இங்கு எழுந்தருளியிரும்; விரைவில் வந்துவிடுவார். தாமதிக்கமாட்டார். இருந்தருளுவீர்" என்று விண்ணப்பஞ் செய்தார். "அம்மா! நாம் இருப்பது வடதேசம்; புகலுதற்கரிய புகழுடைய சிறுத்தொண்டரைக் காணும் பொருட்டு வந்தோம். நாம் எவ்வகையானும் அவர் இல்லாத இவ்விடத்தில் இருக்கமாட்டோம். கணபதிச்சுரம் கோயிலில் அழகிய மலர்கள் நிறைந்த ஆத்திமரத்தின் கீழ் அமர்ந்திருக்கின்றோம். அவர் வந்தவுடன நாம் இருக்குந் தன்மையைக் கூறுவீர்" என்று உரைத்தருளி, கணபதிச்சுரம் என்ற திருக்கோயில் சென்று திருவாத்தியின் கீழ் எழுந்தருளியிருந்தார்.

சிறுத்தொண்டர் அடியவர்களைத் தேடித்தேடித் திரிந்தார். சாலைகளிலும், முடுக்கு மூலைகளிலும், சோலைகளிலும், மணல் மேடைகளிலும், தாமரை ஓடைகளிலும், மற்று எங்கும் ஓடி

ஓடித் தேடினர்; திகைத்தார். ஒருவரையுங் காணாது வருந்தினர். மீண்டு திருமாளிகை வந்தார். மனைவியாரை நோக்கி, "சிவன் செய்கின்ற சோதனையோ? முன் செய்த வினையின் வாதனையோ? அறியேன். எங்கு தேடியும் அடியவர் ஒருவரையுங் காணேன். என் செய்வேன்?" என்று கூறினர்.

திருவெண்காட்டு நங்கையார் கணவனுரைத் தொழுது கூறுவார், "பெருமானே! உத்தராபதியிலிருந்து ஒருவர் வந்தார். எழுந்தருளியிருக்குமாறு வேண்டினேம். அவர் "ஆடவர் இல்லாத இடத்தில் இருக்கமாட்டோம்; கோயிலில் ஆத்திமரத்தின் கீழ் இருக்கின்றோம்" என்று கூறிச்சென்றார். தாங்கள் விரைந்து சென்று அப் பயிரவரைக் கண்டு அழைத்துவாரும்" என்றார். அதைக்கேட்ட நாயனர் அமுதுண்டார்போல் மகிழ்ந்தார். "அடியேன் உய்ந்தேன்" என்று கூறி, மிகுந்த விருப்பத்துடன் விரைந்து திருக்கோயிலை யடைந்து, திருவாத்தியின் கீழ் எழுந்தருளியுள்ள வயிரவரைக் கண்டார். அவர் திருவடி மீது விழ்ந்து வணங்கி நின்றார். "நின்ற தொண்டரை நோக்கி பெரிய சிறுத்தொண்டர் எனபது நீர்தானே?" என்று வயிரவர் வாய் மலர்ந்து கேட்டருளினர்.

சிறுத்தொண்டர் தொழுது கூறுவார். "எம்மை யாளவந்த எந்தையே! திருநீறணியும் அடியார்களை வணங்குந் திறம் அடியேனுக்கில்லை. ஆயினும் அடியார்கள் கருணையினல் அடியேனை அவ்வாறு கூறுவார்கள். குற்றமில்லாத சிவனடியார்களை அமுதுசெய்விக்கும்பொருட்டு இன்று இவ்வூரில் எவ்விடத்தில் தேடியும் கிடைக்கவில்லை. அடியேன் செய்த தவத்தினல் தங்களைக் கண்டேன். இனி தாமதிக்கவேண்டாம். அடியேனுடைய மனைக்கு எழுந்தருளிவந்து அமுதுசெய்ய வேண்டும்" என்றார்.

**வைரவர்:** "நிறைந்த தவமுடையீர்! உம்மைக் காணும் பொருட்டு வந்தோம். நாம் இருப்பது உத்தராபதி; எமக்கு அன்புடன் அமுதூட்ட உம்மால் முடியாது; அது உமக்கு அரிய செயலாகும்"

**சிறுத்தொண்டர்:** "சுவாமி! அடியேன் சிந்தியாமல் ஒன்றையும் சொல்லமாட்டேன். தேவரீர் அமுது செய்யும் தன்மையை அருளிச் செய்யும். சிவனடியார் முயற்சி செய்து தேடினல் இல்லாதனவும் உளவாகும். அருமையில்லை. உரைத்தருளும்"

**வைரவர்:** "அன்பரீர்! நாம் ஆறுமாதத்திற்கு ஒருமுறைதான் உண்போம். பசு வதைத்து உண்போம். அதற்குரிய நாள் இன்று. உம்மால் எமக்கு உணவு செய்விக்க இயலாது"

**சிறுத்தொண்டர்:** "பெருமானே! சாலவும் நன்று; மூன்றுவகையான பசுக்களும் அடியேனிடத்தில் உண்டு. ஒருகுறையுமில்லை. அடியவராகிய தங்கள் அமுதுக்கு உரிய பசு இனனது என்பதை

அருளிச் செய்யும். அடியேன் போய் காலந்தாழாமல் அமுது தயாரித்து விரைவில் வருவேன்"

வைரவர்: "நண்புமிக்கீர்! உமது அன்புக்கு மகிழ்ச்சி; நாம் உண்பது நரப் பசுவாகும்; அதுவும் ஐந்து வயதுக்குள் இருக்க வேண்டும். அங்கப்பழுதில்லாமலிருக்க வேண்டும். புண்ணில் வேல் எறிந்தது போன்ற மற்றொரு செய்தியுளது"

சிறுத்தொண்டர்: "எந்தையே! உமது அருளினால் எதுவும் அரியதில்லை. இனி அருளிச் செய்யும்"

வைரவர்: "ஒருகுடிக்கு நல்ல ஒரு மகனாக இருக்கவேண்டும். தாயார் மடியில் வைத்துப் பிடிக்கும்பொழுது தந்தை மன மகிழ்ச்சியுடன் அரிந்து, குற்றமின்றி அமைத்த கறி நாம் உண்பது; தாய் தந்தை மகன் மூவரும் உவப்புடன் இருத்தல் வேண்டும்"

சிறுத்தொண்டர்: "சுவாமி! தேவரீர் அமுது செய்வதானால் இதுவும் அரியதில்லை. சற்று இரும். தாங்கள் கூறியபடியே அமைத்து வந்து அழைப்பேன" என்று கூறி அவரைத் தொழுது புறப்பட்டார்.

அங்கிருந்து புறப்பட்டு சிறுத்தொண்டர் தமது திருமனையை யடைந்தார். அன்புமிக்க பெருங் கற்புடைய திருவெண்காட்டம்மை கணவனார் வரவு நோக்கி வாயிலின்முன் நின்றிருந்தார். கணவனாருடைய மலர்ந்த முகத்தைக் கண்டு, வணங்கி வயிரவர் செயலை வினவினார். சிறுத்தொண்டர் மனைவியாரை நோக்கி, "பெண்மணியே! வந்த மாதவர் அமுது செய்ய இசைந்தார். நற்குடியில் ஒருமகனாய்ப் பிறந்த ஐந்தாண்டுடைய அங்கப்பழு தில்லாத அழகிய குமாரனைத் தாய்பிடிக்கத் தந்தை யரிந்து சமைத்தால் உண்பேன்" என்றார்.

அரிய கற்புடைய மனைவியார், "பயிரவத்தொண்டர் அமுது செய்வதற்கு நாம் உரிய வகையால் அமுது அமைக்கலாம்; ஒரு குடிக்கு ஒருமகனை எவ்வாறு எங்கு தேடுவோம்" என்றார். சிறுத்தொண்டர், "மாதரசே! இவ்வகைக்கு நிதி நிரம்பத் தந்தால் மகனைத் தருவார்கள். ஆனால் தாய் தந்தையர் தமக்குள் மனமகிழ்ந்து அரிந்து தரமாட்டார்கள். நான் உய்ய நீ பெற்றெடுத்த புத்திரமணியை அழைப்போம்" என்றார். இவ்வாறு கணவர் கூறக்கேட்ட அந்த உத்தமி சிவனடியார் அமுது செய்ய, அதனால் உய்வுபெற்று மகிழும் கணவர் திருமுகத்தைக் காண்பதே கடமை" என்று நினைந்து, "உயிர்த்துணைவரே! அவ்வண்ணமே நம்மைக் காக்க வந்த மாமணியைச் சென்று பள்ளியினின்றும் அழைத்துவாரும்" என்றார்.

(தொடரும்)

13

உ
முருகா

# கற்பு

## குமாரி

குமாரி தன் கணவனுடன் இனிது இல்லறத்தை நடாத்திக் கொண்டுவந்தாள். அவள் கருப்பாக இருந்தாலும் உள்ளம் வெளுப்பாக இருந்தது. கள்ளமில்லாத வெள்ளையுள்ளம். குழந்தையைப் போல் எல்லோரிடத்திலும் அன்பாக நடந்து கொண்டாள். அவளைக் கல்யாணம் செய்துகொள்ளுமுன்னர் அவள் கணவன் கதிரேசன் ஏழையாகவே யிருந்தான். அவள் அவன் வீட்டில் கால் வைத்த விசேடம் வரவர வியாபாரம் வளர்ச்சியுற்றது. அதனல் நிரம்பவும் பொருள் சேர்ந்தது. கதிரேசன் தன்னிடம் அலுவல் பார்க்கும் ஆள்களிடம் அன்பாக இருப்பான். அவர்கள் எதிர்பார்க்கும் அளவினும் மேற்பட்ட ஊதியத்தை நல்குவான். அந்த ஏவலாளிகளும் கதிரேசனைத் தந்தை போல் பாவித்து கண்ணும் கருத்துமாகத் தங்கள் தங்கள் அலுவல்களை ஊக்கமாகச் செய்தார்கள். அதனல் அளவற்ற செல்வம் உண்டாயிற்று; வீடு, தோப்பு, நிலம், மாடு, கன்று, வண்டி, வாகனம் முதலிய எல்லா நலன்களும் நிரம்ப அமைந்திருந்தன. பலர் அவனை அண்டிப் பிழைத்தார்கள். பழுத்த ஆலமரம் பறவைகட்கு உறைவிடம் ஆவது போல் அவன் பலர்க்கு உபகாரியாக இருந்தான்.

குமாரியும் தன் வீட்டில் வேலை செய்யும் பெண்களிடம் இன்னுரை கூறி, உண்டு மிகுதியான உணவுகளை அவர்கட்கு நிரம்பவும் தருவாள்; இடையிடையே வேலை செய்வோர்கட்கு ஓய்வு தருவாள். "பாவம், அவர்கள் உடம்பும் மாமிசத்தால் ஆனதுதானே! இரும்பினல் ஆனதல்லவே? நமக்கு இருப்பது போன்ற இளைப்பு அவர்கட்கும் இருக்கத்தானே செய்யும். சிறிது ஓய்வு அவர்கட்கும் இருப்பது இன்றியமையாததுதானே" என்று குமாரி எண்ணி இரங்குவாள். அவளுடைய நற்குணங்களைப் பாராட்டாதவர்கள் அவ்வூரில் ஒருவருமில்லை. அப்படி எல்லோருடைய உள்ளங்களையும் திருப்திசெய்து வந்தாள் குமாரி.

குமாரி கூர்மையான அறிவுடையவள். அவள் பேசும் பேச்சில் ஆழமும் பொருட் செறிவும் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் கணவனுக்கும் அவளுக்கும் உலகியல் நெறிகளிலும், அறநெறிகளிலும் தர்க்கம் நிகழும். முடிவில் குமாரிக்குத்தான் வெற்றி கிடைக்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை; கடையில்லை. கதிரேசன் வீட்டில் இருந்தான். வேலைக்காரிகள் சமைத்துக்கொண்டிருந்தார்கள். கூடத்தில் கதிரேசன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து

கொண்டிருந்தான். அருகில் வட்டமேஜையில் தினசரி செய்தித்தாள், மாதவெளியீடுகள், திருமுறைகள், திருப்புகழ் முதலியவைகள் இருந்தன.

கதிரேசன் தனக்குள் ஏதோ ஒன்றை நினைத்துச் சிரித்தான். ஒருபுறம் நின்றிருந்த குமாரி கணவனை நோக்கி, "என்னமோ எண்ணிச் சிரிக்கின்றீர்களே?" என்றாள்.

கதிரேசன்: "ஒன்றுமில்லை"

குமாரி: "காரணமின்றிக் காரியம் நிகழாதே?"

"பெண்ணே! நேற்று ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். நான் கடவுளை முப்பது ஆண்டுகளாக நிந்திக்கின்றேனே. கடவுளிருந்தால் என் நாக்கு அழுகிப்போகாதா? இல்லை என்று சொல்லும்போதே உதடுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்ளக் கூடாதா? இதனாலேயே கடவுள் இல்லையென்பது புலனாகின்றது" என்றார். அவர் சொல்கின்றபடியே கடவுள் செய்தால் இந்த வுலகில் கடவுள் இல்லையென்ற நாஸ்திகம் பரவாமல் இருக்குமே? எல்லாம் வல்ல கடவுள் அப்படிச் செய்யக் கூடாதா? என்று நினைத்துச் சிரித்தேன்"

"உயிர்த்துணைவரே! நீங்கள் எண்ணுவதும், அந்த அன்பர் கூறியதும் பிழை; பேசுவதற்குரிய நாவையும், சிந்திக்கின்ற அறிவையும் நல்ல கருவிகரணங்களையும் இறைவர் நமக்குத் தந்தார். அவர் தந்த நாவினாலே அவரை இல்லையென்று சொன்னால் அதனால் இறைவர் சினந்து கேடு செய்யமாட்டார். நன்றிமறந்த பாவத்தினால் இறைவனை மறுப்போருக்கு நியதியின்படி கேடுவரும். ஆண்டவர் கேடு செய்யார். தாய் தன் குழந்தைக்குப் பால்கொடுக்கின்றாள். ஒரு பல் இரு பல் முளைத்த அக் குழவி பால் உண்டவண்ணமாகவே தனத்தைக் கடிக்கும். அதனால் தாய் சிறி ஒரு கத்தி எடுத்து குழந்தையின் பல்லைத் தட்டியெறியமாட்டாள். தன் பாலைக் குடித்த வண்ணமாகத் தனது தனத்தைக் கடிக்கின்ற குழந்தைக்கு மற்றொரு தனத்தையே தருவாள் தாய். பால் நினைந்தூட்டுந் தாயினும் தயாவுடைய தண்ணளி நிறைந்த இறைவர் தன்னை நிந்திக்கும் ஆன்மாக்களை அங்ஙனமே அழித்துவிடமாட்டார். நான் சொல்வது தங்களுக்கு விளங்கியிருக்குமே?"

"பெண்ணே! நன்றாக விளங்கியது. நல்ல எடுத்துக் காட்டு, உன் சொற்களில் அறிவு நலம் ஒளிர்கின்றது"

இவ்வாறு அடிக்கடி இருவரும் அரிய பெரிய பொருள்களைப்பற்றி உரையாடி உவகையுறுவார்கள். அவர்கள் வாழ்விலே சிறிதும் துன்பமின்றி இன்பத் தென்றலே வீசியது. அன்பு மலர் மலர்ந்தது. அருட்கனி கனிந்தது.

சித்திரா பருவம் வந்தது. சித்திரா பருவத்திலே சுவாமிக்குக் கருப்பஞ் சாற்றிலே அபிஷேகஞ் செய்து, பானகம் நிவேதித்து சேவார்த்திகளுக்குத் தருவது வழக்கம். அவர்கள் இருந்த ஊருக்கு அருகே ஒரு சிறு குன்று. அக் குன்றின் மீது குன்றம் எறிந்த குமரவேள் கோயில் ஒன்றுண்டு. அக் குமாரமூர்த்தி மிகவும் வரதர். அப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்யும்பொருட்டு இருவரும் தங்கள் வண்டியில் புறப்பட்டார்கள். பூஜைக்குரிய பொருள்கள், 10, 15, வெல்ல உருண்டைகள், நிவேதனத்துக்குரியவைகள் எல்லாம் வண்டியில் இருந்தன.

போகின்ற வழியில் மழையினால் அதிக சகதி; ஒரு குழிப் பள்ளத்தில் வண்டியின் சக்கரம் இறங்கிவிட்டது. மாடு இழுக்க மாட்டாமல் இடர்ப்பட்டது. கதிரேசர் வண்டியை விட்டு இறங்கி சக்கரத்தைப் பிடித்துத் தள்ளினர். வண்டி நகரவில்லை. அங்கு ஒரு தடிபோன்ற ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் இருப்பதுபோல் வேட்டியிலும் அழுக்கு நிறைந்திருந்தது. அவன் முகத்தில் அசடும் ஆசையும் வழிந்து கொண்டிருந்தன. கதிரேசர் அவனைப் பார்த்து, "அப்பா! இந்தச் சக்கரத்தைப் பிடித்துக் கொஞ்சம் தள்ளு" என்றார். அவன் ஆந்தைபோல் விழித்து கம்பங்கொல்லைக்கு வைத்த பொம்மை போல் நின்றான். மறுபடியும் அவர் "என்னப்பா! அசையாமல் நிற்கின்றாயே? கொஞ்சந் தள்ளு; வெல்லந் தருகின்றேன்" என்றார். அவன் "நிரம்ப வெல்லந் தருகின்றீரா?" என்றான். அவர். "அப்பா! இன்று சித்திராபருவம். உன்னைப்போன்ற ஏழைகட்கு இரவு பானகம் தருவதற்காகத்தான் இந்த வெல்லம் வைத்துளது. நீ வண்டியைத் தள்ளு. உனக்கு நிரம்ப வெல்லந் தருகின்றேன்" என்றார். அவன் வண்டியைப் பிடித்துத் தள்ளிச் சேற்றை விட்டு மேட்டில் ஏற்றினன்.

கதிரேசர் வண்டியிலிருந்த வெல்லத்தில் ஒரு விளாம்பழம் அளவு எடுத்து அவனிடம் நீட்டினர்.

அவன் "ஐயா! நிரம்பவும் வெல்லம் தருவதாகக் கூறினீரே! இது கொஞ்சந்தான். நிரம்பக் கொடும்" என்றான்.

கதிரேசர்: "ஏண்டா? உனக்கு இதுபோதாதா? ஆசை கூடாது" என்றார்.

அவன், "ஐயா! நிரம்பக் கொடுப்பதாகச் சொன்னீரே. சொன்னபடிச் செய்யும்" என்றான்.

கதிரேசர்: "சரி, சரி. இந்தா" என்று ஒரு பனம்பழம் அளவு வெல்லத்தைக் கொடுத்தார்.

"இதுவும் கொஞ்சந்தான். நிரம்பக் கொடும்" என்று அவன் வழக்காடினன். பெரிய வாக்கு வாதத்திற்குப் பின்

அவர் மிகவும் மனஞ் சலித்து ஒரு தேங்காயளவு வெல்லத்தை யெடுத்துக் கொடுத்தார். அதுவுங் கொஞ்சந்தான். நிரம்பக் கொடு என்று வாதாடினன்.

“இந்தத் தடியன் இனி எவ்வளவு தந்தாலும் இப்படியே தான் கூறி வாதாடி நிற்பான். இவனை நாம் மடக்கியனுப்ப வேணும்” என்று குமாரி எண்ணினள். கணவனைப் பார்த்து, “நான் அவனுக்குச் சமாதானம் கூறி யனுப்புவேன்” என்று அத்தடியன் முன வந்து நின்ருள்.

“அடே தம்பி! உனக்கு நிரம்ப வெல்லம் தருவதாகத் தானே பேச்சு?”

“ஆமாம்”

”நிரம்பத் தந்தால் நீ வாங்கிக்கொண்டு போகவேண்டியது தானே”

“அப்படியே போகின்றேனுங்க”

அவள் ஒரு கையிலே கொட்டைப்பாக்களவு வெல்லமும், மற்ருெரு கையிலே எலுமிச்சம்பழம் அளவு வெல்லமும் எடுத்து வைத்துக்கொண்டு, “இந்த இரண்டில் கொஞ்சம் எது? நிரம்ப எது?” என்று வினவினள். அதற்கு அவன் கொட்டைப்பாக்கு அளவு வெல்லத்தைக் கொஞ்சமென்றும், எலுமிச்சம்பழம் அளவு வெல்லத்தை நிரம்ப என்றுங்கூறினன். “சரி இதுதானே நிரம்பவெல்லம். உன் வாக்கின்படி இது நிரம்ப வெல்லம். இந்தா இதை வாங்கிக்கொண்டு, வாயை மூடிக்கொண்டு போ” என்ருள். அவனும் வெட்கித் தலை குனிந்து, கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு போனன். மனைவியின் மதிநலத்தைக் கண்டு கதிரேசர் மகிழ்ச்சியுற்ருர். மலைக் கோயில் சென்று மயூரநாதனை வழிபட்டு பானக பூஜை செய்து, ஏழைகட்கு வழங்கி, தமது மாளிகை சேர்ந்தார்கள.

ஒருநாள் தற்செயலாக வண்டிக்காரன், தோட்டக்காரன் முதலிய பணியாளர்கள் எல்லோரும் ஏதேதோ அவரவர்கள் அவசர நிமித்தம் தத்தம் வீடுகட்குச் சென்ருர்கள். சமையல் வேலை பார்க்கும் பெண்களும் அன்று அந்த ஊரில் நடக்கும் நாடகம் பார்க்கப் போய்விட்டார்கள். கதிரேசரும் குமாரியும் தனியே வீட்டைத் தாளிட்டுக் கட்டிலில் படுத்தார்கள்.

நடுஇரவு; அன்று அமாவாசை முந்தின நாள். நல்ல இருள்; எங்கும் ஒரே நிசப்தம். குமாரி சிறுநீர் கழிக்கும்பொருட்டு எழுந்தாள். அந்நாள் முன்னிரவிலே ஒருதிருடன் அந்த வீட்டில் ஆட்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் நுழைந்துவிட்டான். வய லுக்கு விதைநெல் கொண்டு போகும் ஒரு பெரிய கூடை கவிழ்த்து வைத்திருந்தது. அதற்குள் உட்கார்ந்துகொண்டான்.

நல்ல அயர்ந்த நேரத்தில் இருவரையும் அடித்து நகை பொருள் முதலியவற்றைக் கொள்ளையிடும்பொருட்டு அக் கூடைக்குள் பதுங்கி ஒளிந்திருந்தான்.

அந்தக் கூடைக்குள் ஆள் இருக்கின்ருன் என்பதை அதன் அசைவு முதலிய குறிப்பினல் குமாரி ஊகித்து அறிந்து கொண் டாள். அவள் நெஞ்சு படபட என்று துடித்தது. கூர்த்த மதி யுடைய அவள் பளிச்சென்று அக் கூடையின்மீது போய் உட்கார்ந்து கொண்டு. தன் கணவனைக் கூப்பிட்டாள். கதிரேசன் எழுந்து மனைவியிடம் போனுன்.

“பிராணபதி! இன்று நம்ம ஊரில் நாடகம். நான் கூட சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் இரண்டு, மூன்று நாடகம் கற் றுக் கொண்டேன். நம்ம வீட்டில் உள்ள எல்லோரும் நாடகம் பார்க்கப் போய்விட்டார்கள். நான் இளமையில் கற்றுக் கொண்ட ஒரு நாடகம் நினைவுக்கு வருகின்றது. இன்று நம்ம ஸ்ரீநிவாச முதலிமார் கொண்டுவந்து கொடுத்த ஏழாயிரத்தை யும் பெட்டியில்தானே வைத்திருக்கின்றீர்கள்?” என்ருள். “ஆமாம்” என்ருர் அவர். “நேற்று வந்த மூவாயிரத்தை என்ன செய்தீர்” என்ருள் அவள். “ஏன் கேட்கின்ருய்? அதை மரப் பெட்டியில் வைத்திருக்கின்றேன்” என்ருர். “என் நகைகளை யும் கழற்றி அந்தப் பெட்டியில் தான் வைத்திருக்கின்றேன்”.

இந்தத் தகவல்களைக் கேட்ட திருடனுக்கு வாயில் நீர் ஊறி யது. “இன்றைக்கு நமக்கு நல்லவேட்டை. இருவரும் படுத்து உறங்கியவுடன் பெட்டியுடன் கொண்டுபோக வேண்டும்” என்று திட்டமிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான்.

“பிராணேசா! நான் இளமையில் ஒரு நாடகம் நடித்தேன்; அந்தக் கதை, சுகவனம் என்ற ஊரில் பிரதாபருத்ரன் என் பான் ஒருவன் இருந்தான். அவன் அந்த ஊரில் ஒரு பெரிய ஜமீன்தார். அவருடைய பிள்ளை மணிபல்லவன், அவன் கலா சாலையில் கல்வி பயின்று வந்தான். மிகவும் அறிவுள்ளவனுக வும் ஆற்றல் படைத்தவனுகவும் இருந்துவந்தான். மணிபல்ல வன் தன் எதிர் வீட்டில் இருந்த மகேச்வரியைக் காதலித்து வந்தான். சிலநாட்களுக்குப்பின் திடீர் என்று தந்தை மாண்டு விட்டார். மணிபல்லவன் தன்னிஷ்டப்படி மகேச்வரியை மணந்துகொண்டான். மகேச்வரியின் தம்பி பேர் கிருஷ்ணன். ஒரு பெரிய செவிட்டுப்பயல். மணிபல்லவன் தன் மைத்துன னைக் கூப்பிட்டால் அவனுக்குக் கேட்பதில்லை அதற்காக ஓங் கிய குரலில் “ஓய் கிருஷ்ணு! ஓய் கிருஷ்ணு!” என்று கூப்பிடு வான்” என்று குமாரி நான்கு ஐந்து வீட்டுக்கப்பால் கேட் கின்றமாதிரி பெரிய குரலில் கூப்பிட்டாள். நான்காவது வீட் டில் உள்ள கிருஷ்ணன் என்ற ஊர்ச் சேவகன் ஒரு பெருந் தடி யும் கத்தியும் ஏந்திக்கொண்டு வந்தான். கதவு தட்டினுன். கதிரேசர் கதவைத் திறந்தார்.

அன்பளிப்பு

கிருஷ்ணன் என்ற சேவகன் உள்ளே வந்து "என்ன சேதி" என்று கேட்டான்.

குமாரி, "ஐயா! இப்படி நாற்காலியில் இரும்; உன்னைக் கூப்பிடவில்லை. இன்றைக்கு நமது ஊரில் நாடகமல்லவா? உனக்குந் தெரிந்திருக்குமே? நான் சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் நடித்த ஒரு நாடகத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அதில் கிருஷ்ணன் என்ற செவிடன் ஒருவனை மணிபல்லவன் என்ற ஜமீந்தார் மகன் அழைத்தான் என்ற பகுதியைத்தான் கூறினேன். ஐயோ! பாவம்! உனக்குத் துன்பத்தைக் கொடுத்து விட்டேன். உனக்கு வீண் சிரமம்; பரவாயில்லை. இந்தா சிறிது ரொட்டியாவது சாப்பிடு. நாங்கள் இப்படி வேடிக்கையாகத்தான் பேசிக்கொண்டோம். இதில் ஒரு துளி கூட சந்தேகம் இல்லை. உனக்குச் சந்தேகம் இருக்குமானால் இதோ இந்தக் கூடையின் கீழ் உள்ள ஐபாவைக் கேள்" என்று கூடையைத் திறந்தாள். கிருஷ்ணன் என்ற ஊர்ச் சேவகன் திருடனைப் பிடித்துத் தூணில் கட்டி நல்ல அடியும் உதையும் வழங்கினான்.

மனைவி, சமயோசித புத்தியுடன் ஒரு தந்திரஞ் செய்து, சேவகனை யழைத்துக் கள்வனைக் காட்டிக் கொடுத்த விசித்திரத்தை நினைத்து கதிரேசர் பெரிதும் அதிசயமுற்றார்.

இப்படி மிகுந்த நுண்ணிய அறிவுடைய குமாரி பணிவும் துணிவும் உடையவளாய்த் தன் கணவன் மனம் மகிழ இல்லறத்தை நடாத்திக்கொண்டிருந்தாள்.

---

## ஸௌராஷ்ட்ர நீதி சம்பு

72. எப்பொழுதும் சிறுமையுடையவர்களிடம் சிநேகம் வைத்துக்கொள்ளக் கூடாது. காரணமின்றி சிரிக்கக் கூடாது. பெண்களிடம்சதா வம்பு பேசக் கூடாது. துஷ்ட சிநேகத்தை அறவே ஒழித்துவிட வேண்டும்.

73. மரியாதையான நடத்தைகள், முதியோர்களை மதித்தல், நாணயம், பாப பயம், நியாயம், தயை, இவ்வாறு குணங்கள் எவர்களிடம் இல்லையோ, அவர்களிடம் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்ளக் கூடாது.

74. தேளுக்கு வால் நுனியில் மட்டும் விஷம் உண்டு. ஈக்கு தலையில் மட்டும் விஷம் உண்டு. பாம்பிற்கு நாவில் மட்டும் உண்டு. ஆனால் ஒரு துஷ்டனுக்குச் சரீரம் பூராவும் விஷம் உண்டு.

75. புஸ்தகத்தில் இருக்கும் அறிவு, பிறரிடம் ஒப்படைக்கப்பட்ட பணம, உமக்கு தேவையான சமயத்தில், நீர் கேட்டால்கூட, உமக்கு அவை கிடைக்காது.

5560

உ

முருகா

# குருஞான சம்பந்தர்

[தருமை ஆதீன ஆதி குருமகா சந்நிதானத்தின் அரிய வரலாறு]

தென்பாண்டி நாட்டிலே மிகச் சிறந்த புண்ணியத்தலமாக விளங்குவது ஸ்ரீ வில்லிபுத்தூர். அத் திருத்தலத்திலே கார்காத்த வேளாளர் திருமரபிலே சுப்ரமண்யப் பிள்ளை யென்பவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். தாளாண்மையால் தேடிய பொருள்களை வேளாண்மை செய்து, தானமுந் தவமுஞ் செய்து ஞானமும் சீலமும் உடையராய் வாழ்ந்தனர்.

நல்ல தவஞ் செய்தவர்க்கு நற்குணமுடைய வாழ்க்கைத் துணையமையும். அவருக்கு மீனாட்சியம்மை என்ற உத்தமியார் பத்தினியாக அமைந்தார். கற்புநெறி மிக்க அந்த அம்மையார் விருந்தினர்களை விரும்பி ஆதரித்து, கணவனார் கருத்தறிந்து மிகவும் அன்புடன் கணவனாரை வழிபட்டு இல்லறத்தை நடாத்தினர்.

காதலிருவர் கருத்தொருமித்து, சிவத்தையே பேணி தவத்தைச் செய்து, யாவர்க்கும் இனியர்களாய், ஒருநாளும் ஆலய வழிபாட்டை வழுவாதவர்களாய், சோமவார விரத முதலிய நல்ல நோன்புகளை மேற்கொண்டு, மேன்மையுடன் வாழ்ந்து வந்தார்கள்.

இப்புண்ணிய சீலர்களது மாதவப் பயனைவும், தமிழகம் செய்த தவம் அனைத்தும் திரண்டு ஒருபுறம் குவிந்ததுபோலவும், தெய்வத் திருவருளே ஓருருக் கொண்டதோ என்று கருதவும் மீனாட்சியம்மை கருவடைந்தனர். கோளும் நாளும் நன்னிலைபெற்ற ஒரு சோமவாரத்தன்று ஞான இளங்கதிரேபோல் ஓர் ஆண்மகவு அவதரித்தது. அக்குழவியின் திருமுகத்திலே அருள் ஒளி வீசியது. முழுமதியன்ன முகமலரைக் கண்டார் அனைவரும் அதிசயமடைந்தனர். இறையருள் நிறைந்த அச்சிறு குழந்தைக்கு "ஞானசம்பந்தன்" என்று பேர் சூட்டினர்கள். வளர்பிறை மதிபோல் ஞானச் செல்வர் வளர்ந்தனர்.

ஐந்தாவது ஆண்டு எய்தியது. ஏனையோர்களுடைய பிறப்புக்களை ஒழிக்கவந்த தவப் பிறப்புடையவர் இவர். ஆதலின், வேதாகமங்களும், செந்தமிழ்த் திருமுறை நூல்களும் தாமே இவர்பால் வந்து அடைய, வடமொழி தென்மொழி என்ற இரு மொழிகளின்கரையைக்கண்டுகல்விக்களஞ்சியமாகவிளங்கினர்.

திருமைந்தருடைய பேரறிவையும், அருட்பொலிவையுங் கண்ட தாய் தந்தையர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்கள்.

தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

என்பது பொய்யாமொழியன்றோ?

ஞானசம்பந்தர் கல்வியின் பயனைக் கண்ணுதற் கடவுளைக் கருதிப் பிறவித் துன்பத்தை நினைந்து நினைந்து உள்ளம் உருகி, கோடையில் சிக்கினோன் குளிர்தருவை நாடுவதுபோல் திருவருளை நாடியவண்ணமாக இருந்தனர்.

சுப்ரமண்யப் பிள்ளையும் மீனாட்சியம்மையாரும் தங்கள் ஆன்மார்த்த மூர்த்தியாகிய மதுரை சொக்கலிங்கப்பெருமானை வழிபட விரும்பிப் புறப்பட்டார்கள். தங்கள் குலக்கொழுந்தாகிய குமாரமணியையும் அழைத்துக்கொண்டு மதுரையை அடைந்தார்கள்.

மதுரையை யடைந்ததும் மலர்க்கண்ணீர் பொழிய, புளகாங்கிதமடைந்து, பொற்றாமரைக் குளத்தில் முழுகி, வெண்ணீறு பூசி, ஆலவாயமர்ந்த அங்கயற்கண்ணம்மையாரையும் அழகிய சொக்கலிங்கப்பெருமானையும் கண்குளிரக் கண்டு வாயார வாழ்த்திப் பன்முறை பணிந்தார்கள்.

ஞானசம்பந்தர்மீது சோமசுந்தரப்பெருமானுடைய திருக்கண்ணோக்கம் வீழ்ந்தது. அவருடைய சிவனுக்குள்ளே சிவமணம் பூத்தது. உள்ளக்கமலம் மலர்ந்தது. கடம்பவன நாதரது கருணைவெள்ளத்தில் முழுகினர். பருவமுற்ற காதலி காதலனுக்கு முன்னே நிற்பதுபோல் நின்று இன்ப அமுதை அள்ளிப் பருகினர்.

இங்ஙனம் தாய் தந்தையர்களுடன் காலந்தவறாமல் திருக்கோயிலையடைந்து சொக்கேசரைச் சொக்கிய உள்ளத்துடன் வழிபட்டுவந்தார். அவர் உள்ளத்தில் பற்று பற்றற்று விலகியது. சிவவொளி உள்ளத்தில் இலகியது.

சிலநாட்கள் கடந்தபின் தாய் தந்தையர் விடையேறிவரும் விமலனாரிடம் விடைபெற்றுத் தங்கள் ஊர்போகப் புறப்பட்டார்கள். ஆனால் ஞானசம்பந்தர் அவர்களுடன் புறப்படவில்லை.

"எங்கள் குலம் விளங்கவந்த குமாரமணியே! நாம் நமது ஊருக்குப் புறப்படவேண்டும். உனது ஆடைகளை எடுத்துக்கொண்டு புறப்படு"

"எனக்கு எல்லாம் சொந்த ஊர்தான். என்னுயிர்த் தந்தையும் தாயும் இங்கே எழுந்தருளியுள்ள சொக்கலிங்கப் பெருமானும் அங்கயற்கண்ணியுமே யாவார்கள். அவர்களை விட்டு அடியேன் பிரியேன். இனி நீங்கள் போய் வரலாம். என் உடல் பொருள் உயிர் என்ற மூன்றும் எம்பிரானுக்கே உரியனவாம்".

"மகனே! நாங்கள் தவமிருந்து உன்னை மகனாகப் பெற்றோம். உன்னை விட்டு நாங்கள் எவ்வாறு பிரிவோம்?

எங்கள் மாதவமே! எங்களுடன் புறப்பட்டுவா. தடைசொல் லாதே! மீண்டும் ஒருசமயம் இங்கு வரலாம்''

"எத்தனையோ பிறவிகளை யெடுத்தேன். அத்தனைப் பிறப் புக்களிலும் வேறு வேறு தாயர் தந்தையர்கள். இந்த உடம்புக்கே நீவிர் உறவு. இந்த உடம்பு நானன்று; உடம்பு வேறு, நான் வேறு. ஆகவே என்றைக்கும் ஆன்மாவுக்குத் தாயுந் தந்தையுமாவான் பரமசிவன் ஒருவனேயாகும், அப்பரம பதியை யடைந்த எனக்கு வேண்டிய பொருள் மூவுலகங்களிலு மில்லை. உங்களுக்கும் அவனேதான் தாய் தந்தை, அப்பரம பதியை நீங்களும் பற்றறப் பற்றுங்கள்''

திருமைந்தருடைய தீவிரதர சத்திநிபாத நிலையையும் பற்றற்ற பரிபக்குவத்தையுங் கண்டு, இவர் சிறந்த ஞான மூர்த்தி. இவரால் உலகம் உய்யவேண்டியுளது போலும். இவரை நாம் இனி அழைப்பது பிழையென்று கருதி, சொக்க லிங்கப்பெருமானைத் தொழுது, "ஐயனே! உனது அருளால் உதித்த மகனை உன்னிடமே ஒப்புவித்தோம். உனது இனிய அருள் அவனை என்றுங் காத்தருளும்'' என்று வேண்டி, உள்ளம் சிறிது கலங்கி, அறிவினால் ஒருவாறு தேறி, வில்லி புத்தூர் போய்ச் சேர்ந்தார்கள்.

ஞானசம்பந்தர் தணியாத அன்புடன் ஆறு காலங்களி லும் திருக்கோயிலிற் சென்று வழிபாடு புரிந்து வந்தார். ஒரு நாள் விடியற்காலையில் பொற்றாமரையில் மூழுகச் சென்றார். பொற்றாமரைக் கரையில் பல அடியார்கள், திருநீறும் கண்டி கையும் புனைந்து, எதிரில் சிவலிங்கத்தை எழுந்தருளப்புரிந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி திருமுறைகளை ஓதியவண் ணம் சிவபூஜை செய்துகொண்டிருப்பதைக் கண்ணுற்றார்.

விருப்பு வெறுப்பற்ற அவர் திருவுள்ளத்தில் தாமும் அவ்வாறு சிவபூஜை செய்து சிவானந்தத்தில் திளைக்கவேண் டும் என்ற பெருவிருப்பு அரும்பியது. சொக்கேசர் திருமுன் சென்று தொழுது நின்று, "அடியவர்க்கிரங்கும் அண்ணலே! பிட்டுக்கு மண் சுமந்த பித்தரே! விறகு விற்ற விரகரே! உமது மெய்யடியாரைப்போல் நாயேனும் சிவபூஜை செய்து உய்ய அருள்புரிவீர்'' என்று வேண்டினார்.

அன்று இரவு அவர் கனவில் எம்பிரானார் எழுந்தருளி, "ஞானசம்பந்த! நீ விரும்பியவண்ணம் நாம் சிவலிங்க வடிவு டன் பொற்றாமரைக் குளத்தில் ஈசான திக்கில் தண்ணீருக் குள் இருப்போம். அதிகாலையில் சென்று நீராடி எம்மை யெடுத்து வழிபடுவாயாக'' என்று அருளிச் செய்தனர், ஞானசம்பந்தர் கனவு தெளிந்து எழுந்து, சொக்கநாதருடைய திருவருளை நினைந்து உருகினார்; ஆடினார்; பாடினார்; "ஆ! ஆ!! என்னே இறைவனுடைய கருணை! இந்த நாய்க்கும் அருள்

புரிந்த அப்பனுடைய வான் கருணைக்கு என்னே கைம்மாறு செய்வேன்?" என்று அழுதார். தொழுதார்.

விடியற்காலை சென்று பொற்றாமரையில் முழுகி ஈசான திக்கில் தேடினர். சொக்கலிங்கப் பெருமான் பெட்டகக்கோயி லோடு சிவலிங்க வுருவாய் அவருடைய திருக்கரத்தில் எழுந் தருளினர். ஞானசம்பந்தர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். பெட்டகக் கோயிலைத் திறந்து, சிவலிங்கத்தை நோக்கி, ஆராக் காதலுடன் பாடுவாராயினர்.

சொக்கநா தாவுனையே சொல்லுமடி யேனுடைய
பக்கமாய் நின்றுவினை பாற்றியே—எக்காலும்
ஈண்டுவா ராதகதி மேவுவிப்பாய் தென்மதுரைத்
தாண்டவனே சொக்க நாதா.

ஆறுதலை யில்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை—வேறெனக்குத்
திக்காரு மில்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேசின் ருளே துணை.

சொக்கநாத வெண்பா என்ற இந்த அரிய நூலைப் பாடினர்.

சிவலிங்கத்தை முறைப்படி வழிபடும் வகையறியாது திகைத்தார். "சொக்கேசா! உன்னை எளியேன் எவ்வாறு வழி படுவேன்? அதற்குரிய வழிவகைகளைத் தேவரீரே அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினர்.

அன்றிரவு அவர் கனவில் ஆலவாயண்ணல் எழுந்தருளி, "அன்பனே! உன் கருத்தின்படியே உனக்கு சிவதீக்ஷைசெய்ய வல்ல ஞான ஆசாரியன், திருவாரூரிலே எமது உபதேச பரம் பரையில் வந்த கமலை ஞானப்ரகாசன் என்பான் ஒருவன் உளன். அவனிடஞ் சென்று உபதேசம் பெற்று, விதிப்படி பூசித்து வருக" என்று கட்டளையிட்டருளினர். அவ்வாறே திருவாரூர் ஞானப்ரகாசருடைய கனவிலும் பெருமான் எழுந்தருளி, "அன்பனே! வருகின்ற சோமவாரத் தன்று உன் னிடம் நமது ஞானசம்பந்தன் வருவான். அவனுக்கு ஞானோப தேசஞ் செய்து சிவலிங்க பூசையை எழுந்தருளச் செய்து தருக" என்று ஆணை தந்தருளினர்.

ஞானசம்பந்தர் பரமசிவமூர்த்தியின் கருணையை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்து, ஆலமுண்ட நீலகண்டனிடம் விடைபெற் றுத் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். சோமவாரத் தன்று திருவாரூரை யடைந்து, கமலாலயக் குளத்தில் முழுகிப் பூங் கோயிலுக்குள் புகுந்தார். இன்று தானே ஞானகுருநாதனைப் பெறுகின்ற பெருநாள் என்று ஞானதாகத்துடன் திருக் கோயிலை வலம் வருகின்றார்.

ஞானப்பிரகாசர் "மதுரை சொக்கநாதருடைய கருணையைப் பெற்றுவரும் நன்மாணவரைப் பெறுகின்ற திருநாள் இன்று" என்று மனமகிழ்ந்து கோயிலுக்குள் சித்தீச்சுரம் தட்சிணு மூர்த்திக்கு முன் சிவயோக சமாதியில் அமர்ந்திருந்தனர்.

ஞானசம்பந்தர் அவரைக்கண்டதும், இவரே நமது ஞான குருநாதர் என்று துணிந்து, தாய் முகங்கண்ட சேய்போல், அளவற்ற அன்புடன் அவர் அடிமலர்மீது வீழ்ந்து பணிந்து, எழுந்து ஒருபுறம் ஒதுங்கி நின்றார். ஞானப்ரகாசர் சமாதி கலைந்து, எதிரிலே நிற்கும் உத்தமக் குமாரரைக் கண்டு திருவருள் நிறைந்த செல்வரை அன்புடன் அழைத்து, ஞான தீக்கை யருளி சிவலிங்க பூசையை எழுந்தருளச் செய்து அருள் புரிந்தார்.

இறையருளும் குருவருளும் ஒருங்கே பெற்ற ஞானசம்பந்தர் நாடோறும் முறைப்படி சிவலிங்க வழிபாடு புரிந்து அன்பு நெறி நின்று ஆலய தரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

ஞானப்பிரகாசர் எப்போதும் பல மாணவர்கட்குச் சிவ நெறியை உபதேசித்துக் கொண்டேயிருப்பார். அவரிடம் பக்குவமுடைய மாணவர்கள் பலர் கூடி திருவருளை நாடி நின்றார்கள். அந்த அருட்காட்சியைக் கண்ட ஞானசம்பந்தர்,

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாங்கல்வி கேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன்றி நிரண்டபரத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன் மெய்த் தொண்டர்களே.

என்று அருமையாகப் பாடினர்.

ஒருநாள் ஞானப்ரகாசர் மாலையில் திருக்கோயிலுக்குச் சென்று தியாகராஜரை வணங்கி சித்தீச்சுரம் தட்சிணுமூர்த்தியின் சந்நிதியில் தியான சமாதியில் அமர்ந்தனர். அர்த்த யாமம்வரை தன்னை மறந்து இருந்தனர். பின்னர் எழுந்து வீட்டிற்குப் புறப்பட்டனர். கைவிளக்குக்காரன் தூங்கி விட்டபடியால், ஞானப்ரகாசர் அவ்விளக்கை யெடுத்துக் கொண்டு குருநாதருக்கு முன்னே சென்றனர். குமரர் கோயிலுக்குப் பின்புறமுள்ள தமது வீட்டில் நுழைகின்றபோது மாணவரை நோக்கி "நிற்க" என்று கூறிவிட்டு வீட்டிற்குள் சென்றார்.

குருவாணையின்படி ஞானசம்பந்தர் வீதியில் நின்றார். நின்ற வண்ணமே சிவயோக சமாதியில் நிலைத்துவிட்டனர். அன்றிரவு பெருமழை பொழிந்தது. ஆனால் ஞானசம்பந்தர்மீது ஒரு துளிகூட விழாமல் ஒரு கோல் அளவு அவரைச் சுற்றி மழை விலகிப் பெய்தது. விடியற்காலை ஞானப்ரகாசருடைய மனைவியார் வீட்டிற்குமுன் சாணம் தெளிக்கவந்தவர் ஞானப்ரகாசர்

நின்றபடி சமாதியில் இருப்பதையும் மழை அவரைச் சுற்றி பொழிந்திருப்பதையுங் கண்டு, அற்புதமுற்று உள்ளேசென்று கணவனிடம் இதனை அறிவித்தார்கள். ஞானப்பிரகாசர் வெளியே வந்து ஞானசம்பந்தருடைய அதிதீவிர பக்குவ நிலையைக் கண்டு, "அப்பனே! உன்னால் பல ஆன்மாக்கள் பல காலம்வரை ஈடேறும்படி திருவருள் துணை நிற்கின்றது. ஆகவே நீ வடக்கே சென்று உத்தம மாணவர்கட்கு உபதேசித்து சிவநெறியைப் பரப்புக" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

ஞானசம்பந்தர் அதுகேட்டு, "தேவரீரை விட்டு அடியேன் எவ்வாறு பிரிந்திருப்பேன். எனக்கென்ன சுதந்தரம் உண்டு? தேவரீர் திருவருளாணையின்படி நிற்கக்கடவேன்" என்று பினவரும் பாடல்களைப் பாடியருளினார்.

கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார் புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ரகாச சிதம்பர இன்
றுனக்கிச்சை எப்படியோ அப்படியாக வுரைத்தருளே.

எல்லாம் உனதுசெயல் என்றறிந்தும் எனதுளத்தில்
பொல்லாத சங்கற்பம் ஏன்வருமோ புரமூன்றெரிக்க
வல்லாய் கமலையின் ஞானப்ரகாச வரதஇது
சொல்லாய் கரணமயக்க மன்றேஎன் றெழிலல்லவே.

என்று கூறியருளினார்.

"அன்பனே! அருகிலுள்ள சித்தித் தலமாகிய தருமபுரத்திலே தங்கி ஞான ஆட்சி செய்க" என்று கட்டளையிட்டனர். அவ்வண்ணமே அவர் தருமபுரத்தையடைந்து சிவபோகசாரம் முதலிய அருள் நூல்களைச் செய்து சிவசமாதியில் அமர்ந்திருந்தனர்.

ஆனந்தபரவசர், சச்சிதானந்தர், மருதூர் ஆபதுத்தாரணர் முதலிய சிடர்களுக்கு ஞானோபதேசம் புரிந்து அரன்பணி புரிந்துகொண்டு சிவஞானபானுவாக விளங்கிக்கொண்டிருந்தார்.

ஞானப்பிரகாசர் பரிபூரண சமாதியில் அமரவேண்டும் என்று திருவுளங்கொண்டு, ஆனந்தபரவசர் என்பாரை ஞான பீடத்தில் எழுந்தருளச்செய்து, தாம் சிவலிங்கத்தினடியில் மகாசமாதியில் அமர்ந்துவிட்டார்.

ஆனந்தபரவசர் அதிதீவிரப் பக்குவப்பட்டு பழுத்த பழமாக இருந்தபடியால், குருநாதருடைய கோயிலின் மேற்புறத்தில், உலக நினைவேயின்றி, தாமும் பரிபூரண மகாசமாதியில் அமர்ந்துவிட்டார்,

அதனைக்கண்ட அடியார்கள் இனி தமக்குப் பற்றுக்கோடு யார்? என்று திகைத்தனர். மகாசமாதியில் அமர்ந்த குரு ஞானசம்பந்தர் எழுந்துவந்து, சச்சிதானந்தரை ஞானகுருவாக இருக்குமாறு கட்டளையிட்டுவிட்டு வைகாசிமாதம் அமர பக்கம் சப்தமி திதியிலே சிவசமாதியில் அமர்ந்தருளினார்கள்.

இவர் காலம் 385 ஆண்டுகளுக்கு முன் என அறிக. இவர்கள் ஒப்பற்ற ஞானசிகாமணிகளாய், குருமகா சந்நிதானமாய் விளங்கினார்கள், இவர்களுடைய கோயில் ஞானபுரீசரம் என்று இன்றும் தருமபுரத்தில் விளங்குகின்றது. ஞானதாகமுள்ள அடியார்கள் அனைவரும் தெரிசித்து நலம் பெற வேண்டும்.

ஆசையறுப் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய். —சிவபோகசாரம்.

---

## ஸௌராஷ்ட்ர நீதி சம்பு

76. ஒருமுட்டாள் தன்வீட்டில் மட்டும் மதிக்கப்படுவான். ஒரு பிரபு தன் ஊரில் மட்டும் மதிக்கப்படுவான், ஒரு அரசன் தன் ராஜ்யத்தில் மட்டும் மதிக்கப்படுவான். ஆனால் ஒரு கற்றுணர்ந்த மேதாவி உலகமெங்கும் மதிக்கப்படுவான்.

77. மெத்த படித்தவனாயினும், கெட்டவனாயின், அவனை விட்டு வெகு தூரத்தில் இரு. நாகத்தின் தலையில் நாகரத்தினம் இருப்பதை அறிந்தும், அந் நாகத்தைக் கண்டு ஒவ்வொருவரும் பயப்படத்தானே செய்கிறார்கள்.

78. களவு' யாசகம், கடன், வியாதி, விபசாரம், மிடி, முதுமை, எச்சல் உண்ணல் இவ்வெட்டு தொழில் உடையவர்கள் இக் கஷ்டங்கள் முன்செய்த வினைப்பயன் என மனதில் நினைத்து, இவைகளை சகித்துக் கொண்டே வாழ்கின்றனர்.

79. பணியாட்கள் வாகனவசதி, பந்துக்கள், தான்யம், சுகவாழ்வு செல்வம், மக்கள், மித்திரன், இவர்களுடன் சுகவாழ்வில் இருப்பவர்கள் மேற் சொன்ன எட்டும் முன் ஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பலன்கள் என நினைத்து சந்தோஷமாக வாழ்கின்றனர்.

80. பெற்ற தந்தை ஓதுவித்த குரு, வளர்த்த போஷகர், கல்வி கொடுத்த உபாத்தியாயர், பயத்தை போக்கி வீரமூட்டிய ரக்ஷகர், உலகில் இவ்வைவரும் தந்தைமார்கள் ஆகின்றனர். சிறுவர்களின் பத்தினிமார்கள் தாய்மார்கள் ஆகின்றனர்.

# நிதானம்

எல்லாவித தானங்களினும் நிதானம் பெரிது. நிதானத்துடன் ஒவ்வொரு கருமத்தையும் நன்கு ஆய்ந்து செய்தல்வேண்டும். அவசரம் ஆயிரம் பொன்னையழிக்கும். "பதறுக் காரியம் சிதறுது" என்பது பழமொழி.

நிதானத்தை யிழந்தவர் நெடுந்துன்பம் அடைவர். இதனை விளக்கும் அடியிற்கண்ட உண்மை வரலாறு.

ஊர் ஊராகச் சென்று பண்டங்களைக் கூவி விற்கும் வணிகன் ஒருவன், முதல் வேண்டி ஒரு பெரிய முதலாளியிடம் கடன் வாங்கியிருந்தான். கடன் கொடுத்த தனவந்தன் வணிகனை ஒருநாள் தன் கடனைத் தருமாறு மிகவும் நெருக்கினன். கையில் பணம் இல்லாமையால் கடனைத் திருப்பித் தருவதற்கு வழியறியாத வணிகன் வருந்தினன். தனவந்தன் "நீ இப்படியே காலங் கடத்துகின்றாய்; இனி நான் பொறுக்கமாட்டேன். கடனுக்கு வழி சொன்னால்தான் உன்னை விடுவேன்" என்று கடிந்து கேட்டான்.

வணிகன் தன்வசம் அப்போதிருந்த ஒரு பொன் சங்கிலியை எடுத்துக் கொடுத்து, தான்பட்ட கடனுக்கு அச் சங்கிலி போதுமானதாக இல்லாமையால், "ஐயா! இந்தப் பொன் சங்கிலியையும், என் உயிரினும் இனிய நாயையும் ஈடாக வைத்துக் கொள்ளும், 4, 5 நாள்களுக்குள் பணத்தைக் கொடுத்து இந்த இரண்டையும் திருப்பிக்கொள்வேன்" என்று கூறிச் சமாதானம் செய்து சென்றான். அந் நாயும், பொற்சங்கிலியும் அம் முதலாளியிடம் இருந்தன.

இரண்டொரு நாள்களுக்குப் பின், நள்ளிரவில், அத்தனவந்தன விட்டில் கள்வர்கள் நுழைந்தார்கள், அதுகண்ட அந் நாய் கள்வரை நோக்கிக் குரைத்தது. கள்வர்கள் அதற்கு வேண்டிய இறைச்சித் துண்டுகளை அதன்முன் எறிந்தார்கள். அறிவுள்ள அந்த நாய் இறைச்சியுணவினை ஒரு பொருளாக எண்ணாமல், மேலும் மேலும் குரைத்தது. இதற்குள் அத்திருடர்களில் துணிந்த ஒருவன் வீட்டிற்குள் கன்னம் வைத்து, தனவந்தனுடைய பணம் நகைகள் வைத்திருக்கும் பெட்டியை எடுத்துக்கொண்டு வெளிப்பட்டான். ஓட முயன்ற அவனை ஓடவிடாது நாய் மேல்விழுந்து கடித்து, மறித்து பெரிய இரைச்சல் போட்டுக் குரைத்தது.

காற்றின் நிமித்தம் மேல்மாடியில் படுத்திருந்த தனவந்தரும், அண்டையயலாரும் விழித்து எழுந்துவந்து, ஓடிக் கள்வர்களைப் பிடித்துக்கொண்டார்கள். அந்த நாயினால் அவருடைய பெரிய சொத்து காப்பாற்றப்பட்டது. அதனால் அவ

ருக்கு அளவிறந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. "ஆ! இந்த நாய் இல்லையானால் ஆயிரக்கணக்கான பணமும், பொன் வைர நகைகளும் போயிருக்கும். இதோ இங்கே இறைந்து கிடக்கும் இறைச்சித் துண்டுகளை இதற்கு இரையாக, வந்த திருடர்கள் இறைத்திருக்கின்றார்கள். அதனையும் இது பொருட்படுத்தாமல் தன் கடமையைச் செய்து நமது உடைமையைக் காத்தது. மனிதர்கள்கூட சிறு தொகைக்காகத் தமது கடமையை மறந்து மடமையடைகின்றார்கள். இந்த நாயின் அரிய செயலே செயல்" என்று எண்ணி எண்ணி வியப்பும் உவகையும் அடைந்தார்,

பொழுது விடிந்தது, நாய் செய்த உதவியைக் கருதி, அதன் தலைவன் பட்ட கடனை விடுவித்து, ஒரு சீட்டில் இந்த வரலாற்றை எழுதி, அதன் கழுத்தில் கட்டி, நீ உன் தலைவனிடம் போய்வா" என்று குறிப்பாகக் கூறினன். குறிப்புணர வல்ல அந்நாய் தன் தலைவனிடம் மிக்க மகிழ்ச்சியுடன் ஒரே ஓட்டமாக ஓடிவந்தது,

நன்றியறிவுள்ள நாயைக்கண்ட அவ்வணிகன் சினந்தான். "ஏ மதிகெட்ட நாயே! நான் பட்ட கடனுக்காக உன்னை அடகு வைத்துவிட்டு வந்தேனே. கடன் தீர்ப்பதற்கு முன் இங்கு ஏன் ஓடிவந்தாய்? உனக்கு என்ன அத்தனை மமதை" என்று வைது, அருகில் இருந்த ஒரு பனம்பழம் அளவுள்ள கருங்கல்லை எடுத்து அதன் மீது எறிந்தான். அக்கல் அதன் தலையிற் பட மண்டை உடைந்து நலமிக்க நாய் அலறி வீழ்ந்து மாண்டது.

நாய் மாண்டபின் சினம் ஆறிய வணிகன், நாயை உற்றுப் பார்த்தான்; அதன் கழுத்தில் கடிதத்தின் சுருள் தெரிந்தது. அதை விரைந்து எடுத்து படித்துப்பார்த்தான்.

அன்புள்ள ஐயா! நேற்று இரவு என் வீட்டில் கள்வர்கள் நுழைந்து பெருமதிப்புள்ள பணப்பெட்டியை எடுத்துச் செல்லலுற்றார்கள். தங்கள் நாய் தன்முன் எறிந்த மாமிசத் துண்டையும் மதிக்காமல் கள்வர்களைக் கடித்தும் குரைத்தும் மறித்தும் போரிட்டது: அதனால் நானும் அக்கம் பக்கமுள்ளார்களும் கண்விழித்து கள்வர்களைப் பிடித்து பணப்பெட்டியை மீட்டோம். இந்த நாய் இல்லையானால் எனக்குப் பெரிய கேடு வந்திருக்கும். இது செய்த உதவியை உன்னி உன் கடனை நான் தள்ளிவிட்டேன். நாயைத் திருப்பி யனுப்பியுளேன். நீ நேரில் வந்து உன் பொற் சங்கிலியைப் பெற்றுக் கொண்டுபோவாய்.

இப்படிக்கு
அன்பும் நன்றியும் உள்ள,
தோட்டப்பச் செட்டி,

இக்கடிதத்தைப் படித்தவுடன் வணிகன் கீழே வீழ்ந்து அழுதான்; உருண்டான்; புரண்டான்; தலையின் மீது மோதிக் கொண்டான். நாயை எடுத்து அணைத்துப் புலம்பினான். என் அன்புள்ள நாயே! அந்தோ நான் சண்டாளன். ஆத்திரக் காரன். நீ என்னைக் காண எவ்வளவு வேகமாகவும் அன்புடனும் ஓடிவந்தாயோ? பாவியேன் உன்னை அடித்துக் கொன்று விட்டேனே; உன் மண்டை பிளந்தபோது நீ என்ன நினைத்தாயோ? எப்படி வலித்ததோ? ஐயோ! என் இதயம் வெடிக்கவில்லையே? கொஞ்சம் நிதானபுத்தியுடன் கவனிக்காமற் கெட்டேன். நான் மதிகெட்ட மடையன். நன்றி மிக்க உன்னைக் கொன்ற எனக்கு நற்கதி வருமா? என் உள்ளம் உருகுகின்றதே. அற்ப உயிராகிய உனக்கிருந்த அறிவு மேலான உயிராகிய எனக்கில்லையே" என்று பலவாறு புலம்பி யழுதான். இறந்த நாய் எழுந்திருக்குமா?

தனக்குக் கடன் தந்த தொட்டப்பச் செட்டியிடம் நடந்ததைக் கூறியழுதான். அவரும் கண்ணீர் வடித்தார். அப் பொன் சங்கிலியை அவனிடம் தந்தார். அதனைக் கண்டாரும் கேட்டாரும் கலங்கிக்கலுழ்ந்தார்கள். அவ்வணிகன் அந்த நாயைப் புதைத்து அங்கு ஒரு சிறு கோயில் கட்டி, அதற்குள் அந்த நாயைப் போன்ற கற்சிலையை வைத்தான். தான் செய்த தவறுக்கு அது ஒரு சிறு பரிகாரமாகச் செய்து நன்றி செலுத்தினான்.

இக்கோயிலை இன்றைக்கும் பார்க்கலாம். இரெயிப்பூருக்கு (Raipur) பதினொன்று கல் தொலைவில் இருக்கின்றது.

ஆகவே நிதானத்தை மேற்கொள்ளவேண்டும்.

---

## அநுபவ முறை

**கரிசலாங்கண்ணி:** கரிப்பான், கரிகாலை கையாந்தகரை என இதற்குப் பல பேருண்டு. மிகச் சிறந்த மூலிகை.

நாடோறும் உதயத்திற்கு முன் இம் மூலிகையை நீரில் கழுவி, வாயிலிட்டு மென்று தவறாமல் பல் விளக்கிவந்தால், இருமல், காசம், ஈளை முதலிய பற்பல கபநோய்கள் அணுகா.

பல்வலி, பல்லில் உதிரம் வருதல், கீழ் வடிதல் முதலிய பல்நோய்கள் தீரும்.

**புளியாரை:** புளியாரையை நிழலில் உலர்த்தி இடித்து, அச் சூரணத்தை 1 அல்லது 2 விராகனெடைவீதம் காலை மாலை வெண்ணெயில் உட்கொண்டுவந்தால் காட்பட்ட அண்டவாதம் மேகம்முதலிய நோய்களும் நீங்கும்.